

பெரம்பலூர்,குன்னம் சட்டமன்ற தொகுதி பாகமுகவர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் கமிட்டி ஆலோசனைக் கூட்டம், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. கழக துணைப் பொதுச்செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி.கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினார். இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், மாநில நிர்வாகிகள் பா.துரைசாமி, தொகுதி பார்வையாளர்கள் தங்க.சித்தார்த், ஏ.கே.அருண், குன்னம் சி.இராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.




தலைமைச் செயலகத்தில் 14.10.2025 அன்று மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், கடந்த 05.09.2024 அன்று வடக்கு சிக்கிமில் உள்ள ரோங்லி சூவில் OP SNOW LEOPARDல் படைப்பணியின் போது மரணமடைந்த தமிழ்நாட்டைச் சார்ந்த இளநிலை படை அலுவலர் கே.தங்கபாண்டி என்பவரின் மனைவி வளர்மதி அவர்களிடம் கார்கில் நிவாரண நிதியிலிருந்து கருணைத் தொகையாக ரூபாய் 40 இலட்சத்திற்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்வில் பொது மற்றும் மறுவாழ்வுத் துறை செயலாளர் ரீட்டா ஹரீஷ் தக்கர், கூடுதல் செயலாளர் கி.பாலசுப்ரமணியம் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

## பெரம்பலூர், குன்னம் சட்டமன்ற தொகுதி

# பாகமுகவர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் கமிட்டி ஆலோசனைக் கூட்டம்! ஆ.இராசா எம்.பி. சிறப்புரை!

### வீ.ஜெகதீசன் - பா.துரைசாமி - தங்க.சித்தார்த் - ஏ.கே.அருண் - குன்னம் சி.இராஜேந்திரன் பங்கேற்பு!

பெரம்பலூர்,அக்,17

பெரம்பலூர்,குன்னம் சட்டமன்ற தொகுதி பாக முகவர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் கமிட்டி ஆலோசனைக் கூட்டம், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. 2026 சட்டமன்ற தேர்தலில் பணியாற்றும் வகையில், 10 வாக்குச்சாவடிகளை கண்காணிக்கும் நிர்வாகிகள் கமிட்டி அமைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இன்று நடைபெற்ற கமிட்டி ஆலோசனைக் கூட்டத்தில், கழக துணைப் பொதுச்செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி.கலந்து கொண்டு 2026 சட்டமன்ற தேர்தலில் பெரம்பலூர், குன்னம் ஆகிய இரண்டு சட்டமன்ற தொகுதிகளில் தி.மு.க. வெற்றி பெற வேண்டும் என்று கூறி அதற்கான ஆலோசனைகள் வழங்கினார்.

இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், மாநில நிர்வாகிகள் பா.துரைசாமி, தொகுதி பார்வையாளர்கள் தங்க.சித்தார்த், ஏ.கே.அருண், குன்னம் சி.இராஜேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சய கோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், பட்டுச் செல்வி ராஜேந்திரன், ராமச்சந்திரன், ஆர்.முருகேசன், மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், சன்.சம்பத், நூருல்ஹிதா இஸ்மாயில், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன்,

ஒன்றிய கழக செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.இராஜ்குமார், செ.நல்லதம்பி, தி. மதியழகன்,சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், அழகு. நீலமேகம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன், துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், ஆர்.அருண், டி.ஆர்.சிவசங்கர், மா.பிரபாகரன்,

மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் காடூர்.கவியரசு, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், பேரூர் கழக செயலாளர்கள் எம்.வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், செல்வலெட்சுமி சேகர்,ஏ.எஸ். ஜாகிர்உசேன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்!

## இந்தியத் துணைத் தூதர் திறந்து வைத்தார்!

# ஜெர்மன் - பிராங்க்ஃபர்ட் நகரில் சென்னைப் புத்தகத் திருவிழா அரங்கு!

### பள்ளி கல்வித்துறை முதன்மைச் செயலாளர் மரு. பி.சந்திரமோகன் – அலுவலர்கள் பங்கேற்பு!




பிராங்க்ஃபர்ட், அக். 17-

ஜெர்மனியின் பிராங்க்ஃபர்ட் நகரில் புதன்கிழமை (15.10.2025) அன்று தொடங்கிய 77ஆவது பிராங்ஃபர்ட் புத்தகத் திருவிழாவில் சென்னைப் புத்தகத் திருவிழாவின் அரங்கு, இந்தியத் துணைத் தூதர் (பிராங்ஃபர்ட்) திருமிகு சுசிதா கிஷோர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. 15.10.2025 முதல் 19.10.2025 வரை நடைபெறும் பிராங்ஃபர்ட் புத்தகத் திருவிழாவில் தமிழ்நாடு அரசின் சார்பில் 10 பேர் கொண்ட குழு பங்கேற்கிறது.

இந்தத் தொடக்க விழாவில் தமிழின் தேர்ந்தெடுக்கப்பட்ட 16 சிறுகதைகள் கொண்ட நூல் MEERESWELLEN UND ANDERE GESCHICHTEN (கடல் அலைகள் மற்றும் பிற கதைகள்) என்னும் தலைப்பில் ஜெர்மன் மொழியில் வெளியிடப்பட்டது. திரவுபதி வெர்லாக் என்ற ஜெர்மன் பதிப்பு நிறுவனம் இந்த நூலை வெளிக்கொண்டு வந்துள்ளது. முனைவர் கு. அரசேந்திரன் அவர்களை முதன்மைப் பதிப்பாசிரியராகக் கொண்ட தமிழ்-இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதியின் பொது முன்னுரை மற்றும் முதல் தொகுதி நூல்கள் அறிமுகம் செய்துவைக்கப்பட்டன. இதனை அறிமுகம் செய்யும் படக்காட்சியும் திரையிடப்பட்டது. இந்தத் தொகுதிகள் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மற்றும் ஆக்சுபோர்டு பல்கலைக்கழகப் பதிப்பகம் ஆகியவற்றால் கூட்டு வெளியீடாகக் கொண்டு வரப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித் துறையின் முதன்மைச் செயலாளர் மரு.பி. சந்திரமோகன், நிதித்துறையின் சிறப்புச் செயலாளர் ஜி.கே. அருண் சுந்தர் தயாளன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மரு. மா. ஆர்த்தி, அகில இந்தியக் குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மைய முதல்வர் முனைவர் தே.ச. சரவணன், திரவுபதி வெர்லாக் பதிப்பகத்தின் இயக்குநர் திரு. கிறிஸ்டியன் வெய்ஸ், தமிழ்-இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதியின் முதன்மைப் பதிப்பாசிரியர் முனைவர் கு.அரசேந்திரன், தமிழ்ப் பதிப்பாளர்கள், பிராங்ஃபர்ட் தமிழ்ச்சங்கம் உட்பட ஜெர்மனியின் பல தமிழ்ச்சங்கப் பொறுப்பாளர்கள்இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம்.ராஜூ தலைமையில்

# நீலகிரி மாவட்ட தி.மு.க. பாகநிலை முகவர்கள் கூட்டம்!

### பரமேஷ்குமார், தென்றல் செல்வராஜ், திராவிடமணி முன்னிலை!

நீலகிரி, அக். 17 -

நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில், உதகை, குன்னூர் மற்றும் கூடலூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட பாக நிலை முகவர்கள் (BLA2) கூட்டம் உதகை ஒக்கலிகர் திருமண மண்டபத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜூ தலைமையில் நடைபெற்றது, மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார் அனைவரையும் வரவேற்றார்.

சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் பரமேஷ்குமார், தென்றல் செல்வராஜ், திராவிடமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் திமுக சட்டத்துறை இணைச்செயலாளர் வழக்கறிஞர் தண்டபாணி கலந்துகொண்டு எதிர்வரும் 2026 தேர்தல் பணிகளில் பாக நிலை முகவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார்.

கூட்டத்தில், மாவட்ட அவை தலைவர் போஜன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ரவிகுமார், தமிழ்செல்வன், லட்சுமி, மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், திராவிடமணி, காசிலிங்கம், செந்தில் ரங்கராஜ், தம்பி இஸ்மாயில், சுனிதா நேரு, மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் வாசிம்ராஜா, நகர செயலாளர்கள் ஜார்ஜ், ராமசாமி, சேகரன், ரமேஷ், ஒன்றிய கழக செயலாளர்கள் பரமசிவன், லாரன்ஸ், நெல்லை கண்ணன், காமராஜ், தொரை, பிரேம்குமார், பீமன், சிவானந்தராஜா, ராஜா, சுஜேஷ், ஜெகதீசன், உத்தமன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கருப்பையா, சதக்கத்துல்லா, லியாகத் அலி, வீரபத்திரன், பில்லன், செல்வம்,

மோகன்குமார், உதயதேவன், ராஜேந்திரன், அமிர்தலிங்கம், வாணீஸ்வரி, மகேஷ், காளிதாசன், பேரூர் கழக செயலாளர்கள் பிரகாஷ்குமார், உதயகுமார், நடராஜன், சதீஸ்குமார், சுந்தர்ராஜ், காளிதாஸ், சஞ்சீவ்குமார், முத்து, ரமேஷ்குமார், சின்னவர், சுப்ரமணி, மார்டின், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் சசிகுமார், சிவசுப்ர மணியம், ராஜா, எல்கில் ரவி, காந்தல் ரவி, ஆலன், விவேகானந்தன், ரஹமத்துல்லா, வெங்கடேஷ், செந்தில்நாதன், அன்வர்அப்துல்லா, சுரேஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பாபு, நாகராஜ், பத்மநாபன், முரளிதரன் மற்றும் அனைத்து வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்திலிருந்து, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பாக, போச்சம்பள்ளி சிப்காட் மற்றும் ஓசூர் சிப்காட் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள குழந்தைகள் காப்பகங்களை திறந்து வைத்தார். அதனைத்தொடர்ந்து, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் போச்சம்பள்ளி சிப்காட் வளாகத்தில் உள்ள குழந்தைகள் காப்பகத்தில் கிழக்கு மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் ஆகியோர் திறந்து வைத்து குழந்தைகளுக்கு இனிப்புகளை வழங்கினார்கள். உடன், சிந்து, கோவிந்தசாமி, நாகராசன், குண.வசந்தரசு உள்ளிட்ட பலர் உள்ளனர்.



கோவை மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதி, வால்பாறை நகராட்சி, சிறுகுன்ற ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி நேரில் ஆய்வு செய்து மாணவ, மாணவிகளுடன் உணவு அருந்தினார். இதில் குட்டி சுதாகர், அழகு சுந்தரவல்லி, பி.எஸ்.தங்கராஜ், கிருஷ்ணசாமி உள்பட கழக நிர்வாகிகள் மற்றும் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டில் உள்ள 16 கூட்டுறவு – 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில்

# 5308 பணியாளர்களுக்கு 2024-2025 ஆம் ஆண்டிற்கான போனஸ் - கருணைத் தொகை!

### வழங்க உத்தரவிட்ட முதல்வருக்கு – அமைச்சர் இரா.இராஜேந்திரன் நன்றி!

சென்னை,அக்.17-

சுற்றுலா மற்றும் சர்க்கரைத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

கரும்பு விவசாயிகளின் நலன் மற்றும் சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு, 2 பொதுத் துறை, 22 தனியார் என மொத்தம் 40 சர்க்கரை ஆலைகள் உள்ளன.

கரும்பு விவசாயிகளின் மீது அக்கறை கொண்ட இவ்வரசு கரும்பு சாகுபடி பரப்பை அதிகரிப்பதற்காகவும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் அனைவரும் குடும்பத்தினருடன் எதிர்வரும் தீபாவளி பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில் 2024-2025 ஆம் ஆண்டிற்கான போனஸ் மற்றும் கருணை தொகை வழங்க ஆணையிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில் ஒதுக்கீட்டு உபரி உள்ள சுப்ரமணிய சிவா மற்றும் கள்ளக்குறிச்சி - II ஆகிய இரு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கும் மிகை ஊதியமாக 8.33 % மற்றும் கருணைத் தொகையாக 11.67 % என மொத்தம் 20 % போனஸ் வழங்கவும், மீதமுள்ள 14 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு மிகை ஊதியமாக 8.33 % மற்றும் கருணைத் தொகையாக 1.67 % என மொத்தம் 10% போனஸ் வழங்கவும் ஆணையிட்டுள்ளார்கள்.



இதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள 16 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் சுமார் 5308 தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் பயன்பெறுவார்கள். மேலும், மிகை ஊதியம் மற்றும் கருணை தொகை வழங்க ரூ. 353.37 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு / பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு போனஸ் வழங்கி உத்தரவிட்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் சார்பாக மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பாக, கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூர் சிப்காட் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள குழந்தைகள் காப்பகங்களை திறந்து வைத்தார். அதனைத்தொடர்ந்து, ஓசூர் சிப்காட் வளாகத்தில் உள்ள குழந்தைகள் காப்பகத்தில், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ், ஓசூர் மாநகராட்சி மேயர் சத்யா ஆகியோர் குழந்தைகளுக்கு இனிப்புகளை வழங்கினார்கள். உடன், ஓசூர் மாநகராட்சி துணை மேயர் ஆனந்தைய்யா, ஓசூர் சிப்காட் திட்ட அலுவலர் ராஜ் குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி பேரூராட்சிக்குட்பட்ட பொறையாரில் உள்ள நிவேதா மெட்ரிகுலேஷன் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சியர் எஸ்.ஸ்ரீகாந்த் , நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. ஆகியோர் தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் எம்.எம்.சித்திக், முத்து. மகேந்திரன், பி.எம்.அன்பழகன், எம். அப்துல் மாலிக், அமிர்த விஜயகுமார், தரங்கம்பாடி.சுகுண சங்கரி குமரவேல், பொன். இராஜேந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.